**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர்,**

**முன்னிலை : திரு. ப. முருகேசன், பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கூடலூர்.**

**2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 09- ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ பராபவ வருடம், வைகாசி மாதம் 26-ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண். 9/2019**

**CNR.No.TNNS070002602019**

பி.அகமது குட்டி . . . வாதி

// எதிர்//

1) கள இயக்குநர்,
முதுமலை, நீலகிரி.

2) வன சரக அதிகாரி,
சிங்காரா, நீலகிரி.

3) வன சரக அதிகாரி,
கார்குடி, நீலகிரி.

4) கந்தன்,
வன சரக அதிகாரி,
சிங்காரா, நீலகிரி.

5) ஆனந்த்,
வனக்காப்பாளர்,
கார்குடி, நீலகிரி.

6) மாவட்ட ஆட்சியர், நீலகிரி,
உதகமண்டலம். . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கு கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 08.03.2019-ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு நீலகிரி மாவட்ட நீதிமன்றம் உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

இவ்வழக்கானது 02.06.2026-ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி.மேத்யூ அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இவ்வழக்கு சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று 09.06.2026-ஆம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

**2). வழக்குரையின் சுருக்கம்** :

(i). கூடலூர் கிராமம் R.S.No.825/3 விஸ்தீரணம் 20 செண்ட் அதிலுள்ள கதவு எண்.12/439B வீட்டில் கே.கங்காதரன் என்பவர் சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் 1989ஆம் ஆண்டு வரை இருந்து வந்தார். அதன் பின்பு 19.09.1989ஆம் தேதி மேற்படி தாவா சொத்தை கார்த்தியாயினி, க/பெ.ராஜன் என்பவர் கே.கங்காதரனிடமிருந்து கிரயம் பெற்று, தாவா சொத்திற்கு மின் இணைப்பு ராஜன் பெயரிலும், குடிநீர் இணைப்பு கார்த்தியாயினி பெயரிலும் பெற்று, அவரது குடும்ப உறுப்பினர்கள் 29

ஆண்டுகளாக குடியிருந்து, சுவாதீனம் மற்றும் அனுபோகம் செய்து வந்திருக்கிறார்கள்.

**(ii).** R.S.No.825/2 வாதியின் பட்டா நிலம் தாவா சொத்திற்கு வடக்கு, மேற்கு, தெற்கு எல்லையில் இருந்து வருகிறது. அதனால் தாவா சொத்தான தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலமான R.S.No.825/3 அதிலிருந்த கதவு எண்.12/439A, 12/439B, மின் இணைப்பு S.C.No.03409016424-உடன் ராஜன், கார்த்தியாயினி சுவாதீனம், அனுபோகத்தில் இருந்த நிலத்தை பொறுத்து 06.10.2018ஆம் தேதி வாதி கிரயம் பெற்று, தாவா சொத்தையும், வாதியின் பட்டா நிலத்தையும் சேர்த்து இரும்பு வேலி அமைத்து யாருடைய இடையூறும் இல்லாமல் வாதி பராமரித்து வருகிறார். மேற்படி சொத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள பாதையை மைசூர்-ஊட்டி பிரதான சாலையில் இருந்து பயன்படுத்தி வருகிறார்.

**(iii).** 2010ஆம் ஆண்டு 3-ஆம் பிரதிவாதி தேவையில்லாமல் வாதியின் பட்டா நிலமான R.S.No.825/2 நிலத்தில் இருந்து கிழக்கே ஊட்டி-மைசூர் சாலைக்கு செல்வதற்கு உள்ள பாதையை பயன்படுத்துவதை தேவையில்லாமல் தொந்தரவு செய்தார். அதனால், அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1, 3, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.36/2010 வழக்கு தாக்கல் செய்து முழு விசாரணையின் முடிவில்,

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:47:34 +0530

22.12.2017ஆம் தேதி கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பித்து இருக்கிறது.

**(iv).** மேற்படி தீர்ப்பினை ஆட்சேபித்து 1 முதல் 3 பிரதிவாதிகள் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2018 தாக்கல் செய்தனர். அதில் அப்போது உள்ள நிலை (Status quo) பராமரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் 3-ஆம் பிரதிவாதி எவ்வித அடிப்படையும் இன்றி பழிவாங்கும் எண்ணம் கொண்டு 08.10.2018ஆம் தேதி காலை 9 மணிக்கு வாதி கேரளாவில் இருந்த சமயம் பிரதிவாதிகள், அவரது உதவியாளர்கள் மற்றும் பணியாளர்கள் வன்முறை மூலம் சட்டவிரோதமாக வாதியின் பட்டா மற்றும் பட்டா வழங்கப்படாத முழு உரிமையாளராக வாதி நீண்ட காலம் சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் இருந்து வந்த நிலத்தில் அத்துமீறி உள்ளே நுழைந்து பட்டா நிலம் மற்றும் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலத்தில் சுற்றி அமைக்கப்பட்டிருந்த இரும்பு வேலியை அப்புறப்படுத்தி, 2 முதல் 5 பிரதிவாதிகள் அழிம்பு செய்து இருக்கிறார்கள். நீதிமன்றம் வழங்கிய Status quo உத்தரவு மதிக்காமல் மீறி இருக்கிறார்கள். அதனால் பிரதிவாதிகள் உரிமையியல் மற்றும் குற்றவியல் அவமதிப்பு வழக்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்கள் ஆவார்கள். வாதிக்கு அதற்கான தனி நடவடிக்கை எடுக்க வாதிக்கு உரிமை உள்ளது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:47:38 +0530

**(v).** அது குறித்து 08.10.2018ஆம் தேதி வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். காவல்துறையினர் உரிமையியல் நடவடிக்கை நீதிமன்றம் மூலம் எடுக்க அறிவுரை வழங்கினார்கள். பிரதிவாதிகள் மற்றும் அவருக்கு கீழ்ப்படிநிலையில் உள்ளவர்கள் வாதி சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் உள்ள தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழையவும், வாதி நிலத்தில் எந்த ஒரு பகுதியிலும் உள்ளே நுழையவும் எவ்வித உரிமையும் இல்லை. பிரதிவாதிகள் சேதம் ஏற்படுத்தியது குறித்து வாதி 24.01.2019 அறிவிப்பு அனுப்பியிருக்கிறார். 2 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு 26.02.2019ஆம் தேதி தாவா சொத்திற்கு வந்து வாதியை தாவா சொத்தில் இருந்து வெளியேற வேண்டும். இல்லாதபட்சத்தில் எவ்வித முன் எச்சரிக்கையும் இன்றி வலுக்கட்டாயமாக உள்ளே நுழைந்து, வீட்டை அப்புறப்படுத்தி விடுவோம் என்று மிரட்டி இருக்கிறார்கள். அதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3). எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

**(i).** வாதியின் வழக்கு பொய்யானது, அற்ப்பத்தனமானது மற்றும் அலைக்கழிவானது. சட்டம் அல்லது பொருண்மைகள் படி வழக்கு நிலைக்கதக்கது அல்ல. வழக்குரை பாரா 2 முதல் 11-ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுகிறது. அதனை வாதியே நிரூபிக்க வேண்டும்.



P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:47:42 +0530

**(ii).** தாவா சொத்தினை வாதி பட்டா எண்.406 பெற்றும், பதிவு கிரய ஒப்பந்தம் மற்றும் கிரய ஆவணம் மூலம் சுவாதீனம், அனுபோகம் செய்து வருகிறார் என்று கூறுவது முற்றிலும் பொய். R.S.No.825/3 அரசு நிலம். அதில் பயன்பாட்டில் இல்லாத இரண்டு பழைய வனத்துறை கட்டிடங்கள் இருக்கிறது. அதில் மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு எதுவும் இல்லை.

**(iii).** தாவா சொத்தை கார்த்தியாயினி க/பெ.ராஜனிடம், வாதி கிரயம் பெற்றதற்கான எந்த பதிவு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அதனால் கார்த்தியாயினி க/பெ.ராஜன் தாவா சொத்தில் 29 ஆண்டுகள் சுவாதீனம், அனுபோகம் செய்து வந்தாக கூறுவது பொய். தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள R.S.No.825/2 சொத்தை பொறுத்து வாதி கூடலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.36/2006 வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அதனை ஆட்சேபனை செய்து மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2018 தாக்கல் செய்து இ.ம.எண்.9/2018-ல் Status quo உத்தரவு மாண்புமிகு கூடலூர் சார்பு நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், வாதி அதனை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டு அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து, இரும்பு வேலி அமைக்க முயற்சி செய்தார். அதனை வனத்துறை அலுவலர்கள் தடுத்து விட்டனர். அதனால், வாதி மற்றும் பலருக்கு எதிராக

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:47:46 +0530

O.R.No.335/2018 வழக்கு பதிவு செய்து, வழக்கு சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு, கூடலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளது.

**(iv).** கதவு எண்.12/439A1A மற்றும் 12/439B வீடுகள் எதுவும் தாவா சொத்தில் இல்லை. இரண்டு பழைய வனத்துறை குடியிருப்பு தான் இருக்கிறது. கதவு எண்.439B வீடு தாவா சொத்திற்கு வெளியே இருக்கிறது. அந்த வீடு கார்த்தியாயினி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் வசித்த வீடாகும். ஆணையுறுதி ஆவணம் மற்றும் வழக்குரையில் வாதி தொரப்பள்ளி அஞ்சல், கதவு எண்.12/439D வீட்டில் வசித்து வருவதாக கூறியிருக்கிறார். ஆனால் மேற்படி கதவு எண்.12/439D வீட்டில் முஜீப் என்பவர் வசித்து வருகிறார். வீட்டு வரி முஜீப் பெயரில் தாக்கலாகி வருகிறது.

**(v).** வாதியின் குடியிருப்பு மற்றும் உரிமை மூலத்தை நிரூபிக்கக்கூடிய பதிவு ஆவணம் எதுவும் வாதி தாக்கல் செய்யவில்லை. அதனால் வாதி தூய்மையற்ற கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகி உள்ளார். வாதி 24.01.2019ஆம் தேதி அனுப்பிய அறிவிப்பிற்கு 18.02.2019ஆம் தேதி பிரதிவாதி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார். ஆனால் அதனை வாதி தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. சட்ட பிரச்சனையை பல்கிபெருக்கி, மேம்படுத்தி கட்டமைக்க இவ்வழக்கு வாதியால் அற்ப்பத்தனமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(vi).** 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1973 பிரிவு 60 (2)-ன் கீழ் வழக்கு

அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் மாநில அல்லது மத்திய அரசு அலுவலர் அல்லது பிற பணியாளர்கள் மீது நல்லெண்ணத்தின் பால் செய்த செயல்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்ய முடியாது. தாவா சொத்தை நில அபகரிப்பு செய்ய வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து சட்டப்படி முற்றிலும் வனத்துறைக்கு பாதிக்கப்பட்டதாகும். வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை.

**(vii).** வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்கு மூலமும் இல்லை. அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல. அதனால் வாதியின் வழக்கை அதிகப்படியான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 3ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2, 4, 5 மற்றும் 6 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் 3ஆம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை பின்னேற்ப்பு (Adopt) செய்யப்பட்டுள்ளது.

**4).** இவ்வழக்கில் தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்து இவ்வழக்கை தீர்வு செய்வதற்கு, இந்நீதிமன்றம் 21.04.2025-ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்திருக்கிறது.

**1) Whether the present suit is maintainable before this court ?**

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:47:53 +0530

**2) Whether the plaintiff is in lawful possession and enjoyment of the suit property ?**

**3) Whether the plaintiff is entitled to the relief of permanent injunction, with regard to the suit property, as prayed for ?**

**4) Whether the plaintiff is entitled to costs of the suit ?**

**5) To what other reliefs are the parties entitled to ?**

**5).** வாதி தரப்பில் வா.சா.1, வா.சா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.21 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6). எழுவினா 1-ற்கான தீர்வு :**

**(i).** இவ்வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 4-ஆம் பிரதிவாதி சிங்காரா வனச்சரக அலுவலர் திரு.கந்தன், 5-ஆம் பிரதிவாதியாக கார்குடி வனச்சரக அலுவலக வனக்காப்பாளர் திரு.ஆனந்த் என்பவர்கள் வழக்குரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:47:57 +0530

**(ii).** மேலும், பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் சாட்சியத்தில் வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 60(2)-ன் படி நல்லெண்ணத்தில் செயல்பட்ட அலுவலர்களுக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று முக்கிய எதிர்வாதம் எழுப்பப்பட்டுள்ளது. மேலும், வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 60-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

60. Protection of action taken in good faith.-

(1) No-suit, prosecution or other legal proceeding shall lie against any officer or other employee of the Central Government or the State Government for anything which is in good faith done or intended to be done under this Act.

(2) No suit or other legal proceeding shall lie against the Central Government or the State Government or any of its officers or other employees for any damage caused or likely to be caused by anything which is in good faith done or intended to be done under this Act.

(3) No suit or other legal proceeding shall lie against the Authority referred to in Chapter IVA4[Chapter IVB] and its chairperson, members, member-secretary, officers and other employees for anything which is in good faith done or intended to be done under this Act.]

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:00 +0530

**(iii).** மேற்படி சட்டப்பிரிவை பரிசீலனை செய்கையில் நல்லெண்ணத்தில் பணியின் போது செய்த செயல்களுக்காக அல்லது சேதத்திற்காக மத்திய அல்லது மாநில அரசு அல்லது அதன் அலுவலர்கள் அல்லது பணியாளர்களுக்கு எதிராக உரிமையியல் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது.

**(iv).** வன அலுவலர்களான 4, 5 பிரதிவாதிகளை தனி நபர்களாக வழக்குரையில் குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால், இவ்வழக்கு வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972 பிரிவு 60-ன் கீழ் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கை விசாரணை செய்ய இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்பதும் தெளிவாக தெரியவருகிறது. அதனால் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1-ற்க்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>7). எழுவினாக்கள் 2, 3-ற்க்கான தீர்வு</u>**

**(i).** தாவா சொத்து அதிலுள்ள கதவு எண்.12/439B வீட்டில் K.கங்காதரன் என்பவர் சுவாதீனம் மற்றும் அனுபோகத்தில் 1989 ஆம் ஆண்டு வரை இருந்து வந்து, பின்பு 19.09.1989ஆம் தேதி தாவா சொத்தையும், அதிலுள்ள கதவு எண்.12/439B வீட்டையும் கார்த்தியாயினி, க/பெ.ராஜன் என்பவர் கே.கங்காதரனிடமிருந்து கிரயம்

பெற்று, குடியிருந்து வந்திருக்கிறார். பின்பு, தாவா சொத்து மற்றும் அதிலுள்ள கதவு எண்.12/439A, 12/439B மின் இணைப்பு S.C.No.03409016424-உடன் ராஜன், கார்த்தியாயினி சுவாதீனம், அனுபோகத்தில் இருந்த நிலத்தை பொறுத்து 08.10.2018ஆம் தேதி வாதி கிரயம் பெற்று தாவா சொத்தையும், வாதியின் பட்டா நிலத்தையும் சேர்த்து சுவாதீனம், அனுபோகம் செய்து வந்தபோது பிரதிவாதிகள் 08.10.2018ஆம் தேதி, 26.02.2019ஆம் தேதி தாவா சொத்தில் வாதியின் சுவாதீன அனுபோகத்தை தடையிடைஞ்சல் செய்ததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை வாதி தாக்கல் செய்திருக்கிறார் என்பது வழக்குரை மற்றும் வா.சா.1-ன் முதல் விசாரணை சாட்சியத்தின் மூலம் அறியமுடிகிறது.

**(ii).** வாதியின் வழக்குரை சங்கதியை நிரூபிக்க வேண்டி வாதி தரப்பில் வாதி, வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.21 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்த நபரான ராஜன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டிருக்கிறார். வா.சா.ஆ.1 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 19.09.1989ஆம் தேதியிட்ட கூடலூர் தாலுகா மற்றும் கிராமம், புதிய சர்வே எண்.825/3-ல் பாகம், 20 செண்ட் நிலம் மற்றும் அதிலுள்ள கூடலூர் பஞ்சாயத்து கதவு எண்.12/439B வீட்டை கார்த்தியாயினிக்கு, ரூ.35,000/- கிரய மறுபயன் தொகைக்கு கங்காதரன் எழுதிக்கொடுத்துள்ள பதிவு செய்யப்படாத கிரய பத்திரம் அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.2


P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:07 +0530

சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 02.05.1996ஆம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் கூடலூர் அவர்கள் வழங்கிய புல எண்.825-க்கான மாதிரி வரைப்படம் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ3 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 10.09.2003ஆம் தேதியிட்ட கூடலூர் தாலுகா சர்வே சார்பு ஆய்வாளர் வழங்கிய அறிவிப்பு ஒளிநகல் என்பது தெரியவருகிறது.

**(iii).** வா.சா.ஆ.4 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 25.07.2012ஆம் தேதியிட்ட கூடலூர் வட்டாட்சியர் வழங்கிய வசிப்பிட சான்றில் கூடலூர் 1 கிராமம், கதவு எண்.12/439B தொரப்பள்ளி என்ற முகவரியில் ராஜா மனைவி கார்த்தியாயினி கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தரமாக வசித்து வருகிறார் என்று சான்றளித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.5 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 20.09.2016ஆம் தேதியிட்ட கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்பிட சான்றிதழில் கார்த்தியாயினி க/பெ.ராஜா என்பவர் கூடலூர் 1 கிராமம், கதவு எண்.12/439B தொரப்பள்ளி என்ற முகவரியில் நிலையாக வசித்து வருகிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.6 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நிலப்பதிவேட்டில் கூடலூர் 1 கிராமம், புல எண்.825/3 அரசாங்க நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது.

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:48:11 +0530

**(iv).** வா.சா.ஆ 7 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் கூடலூர் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய கூடலூர் கிராமம், புல எண்.825, 826பகுதி-க்கான மாதிரி வரைப்படம் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.8 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் கார்த்தியாயினி பெயரில் தொரப்பள்ளி, கூடலூர் கதவு எண்.12/439B வீட்டிற்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 9) அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.9 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் மின் இணைப்பு எண்.03409016424-க்கு ராஜா, ராஜன் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டணம் ரசீதுகள் (எண்ணிக்கை 5) அசல் என்பது தெரியவருகிறது.

**(v).** வா.சா.ஆ.10 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 07.02.2019ஆம் தேதி தொரப்பள்ளி கதவு எண்.12/439B-க்கு கார்த்தியாயினி பெயரில் குடிநீர் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட தண்ணீர் வரி ரசீது அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.11 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 06.10.2018ஆம் தேதியிட்ட கூடலூர் நகராட்சி, கூடலூர் 1 கிராமம், R.S.No.825/3 விஸ்தீரணம் 20 செண்ட் மற்றும் அதிலுள்ள கதவு எண்.12/439A, 12/439B வீடு மற்றும் அதிலுள்ள மின் இணைப்பு எண்.03409016424 சொத்தை பொறுத்து கார்த்தியாயினி அவரது கணவர் ராஜா ஆகியோர் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரய ஒப்பந்தம் அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.12 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில்

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:14 +0530

17.11.2018ஆம் தேதியிட்ட கார்குடி வனச்சரக அலுவலர், கார்த்தியாயினிக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் என்பது தெரியவருகிறது.

**(vi).** வா.சா.ஆ13 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 23.11.2018ஆம் தேதியிட்ட தினமலர் நாளிதழ் செய்தி என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.14 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 24.01.2019ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீதுகள் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ15 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் அஞ்சலக ஒப்புதல் அட்டை (எண்ணிக்கை 4) என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.16 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் சிங்காரா வனச்சரக அலுவலர் மற்றும் 4-ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் உறை (எண்ணிக்கை 2) என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.17 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 08.10.2018ஆம் தேதி வாதி கூடலூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.18 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் புகைப்படங்கள் (எண்ணிக்கை 8) என்பது தெரியவருகிறது.

**(vii).** வா.சா.ஆ.19 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் குறுந்தகடு (சிடி) என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.20 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 07.10.2018ஆம் தேதியிட்ட புகைப்படம் எடுத்ததற்கான ரசீது அசல் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.21 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில்

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:18 +0530

தொரப்பள்ளி கதவு எண்.12/439A-க்கு ராஜா பெயரில் கூடலூர் நகராட்சியில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் என்பது தெரியவருகிறது.

**(viii).** பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தான புல எண்.825/3 அரசு நிலம் அதில் பாழடைந்த மற்றும் பயன்பாட்டில் இல்லாத இரண்டு வனக்குடியிருப்பு கட்டிடம் இருக்கிறது. தாவா சொத்தில் கதவு எண்.12/439A, 12/439B வீடு மற்றும் மின் இணைப்பு S.C.No.03409016424 எதுவும் இல்லை. மேலும், தாவா சொத்து மற்றும் அதிலுள்ள வனக்குடியிருப்பு கட்டிடத்தில் கங்காதரன், கார்த்தியாயினி, வாதி எப்போதும் சுவாதீன அனுபோகத்தில் இருந்ததில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு எதுவும் இல்லை. அதனால், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது.

**(ix).** பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்தை நிரூபிக்க வேண்டி கார்குடி வனச்சரக அலுவலர் திரு. பாலாஜி பி.வா.சா.1- ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 18.02.2019ஆம் தேதியிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் வாதி வழக்கறிஞர் 24.01.2019ஆம் தேதியிட்டு அனுப்பிய அறிவிப்பிற்கு அனுப்பிய பதில் அறிவிப்பு என்பது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.2 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 03.09.2019ஆம் தேதியிட்ட கூடலூர் வட்டாட்சியர், கார்குடி


P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:48:22 +0530

வனச்சரக அலுவலருக்கு அனுப்பிய கடிதம் அதில் கூடலூர் 1 கிராமம், பழைய புல எண்.9, புதிய புல எண்.825/3 ஆனது 0.07.5 ஹெக்டேர் விஸ்தீரணம் கிராம ஆவணங்களில் வன இலாக்கா குடியிருப்பு என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலையில் உள்ள இரண்டு குடியிருப்பு கட்டிடமானது பாழடைந்த நிலையில் உள்ளது என்று கூறியிருக்கிறார் என்பது தெரியவருகிறது.

**(x).** பி.வா.சா.ஆ.3 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் 03.09.2019ஆம் தேதியிட்ட கூடலூர் வட்டாட்சியர் வழங்கிய நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டு உண்மை நகலில் கூடலூர் 1 கிராமம், புல எண்.825/3, பழைய புல எண்.9 விஸ்தீரணம் 0.07.5 ஹெக்டேர் வன இலாக்கா குடியிருப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. பி.வ.சா.ஆ.4 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் புகைப்படம் மற்றும் குறுந்தகடு என்பது தெரியவருகிறது.

**(xi).** இவ்வழக்கின் தாவா சொத்தாக நீலகிரி பதிவு மாவட்டம், கூடலூர் கிராமம், கூடலூர் தாலுகா, தொரப்பள்ளியில் உள்ள R.S.No.825/3 விஸ்தீரணம் 20 செண்ட் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம், அதிலுள்ள கதவு எண்.439/A, 12/439B வீடுகள், அதிலுள்ள மின் இணைப்பு எண்.03409016424, அதன் நான்கு எல்லைகளாக கிழக்கு - ஊட்டி-மைசூர் பிரதான சாலை R.S.No.827, மேற்கு, வடக்கு, தெற்கு - வாதிக்கு சொந்தமான பட்டா நிலம் R.S.No.825/2 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:25 +0530

**(xii).** மேலும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **Arjun Panditrao Khotkar vs Kailash Kushanrao Gorantyal on 14 July, 2020, AIR 2020 SUPREME COURT 4908** என்ற வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B-ன் கீழ் சான்றிதழ் தாக்கல் செய்யப்படாத மின்னணு சாட்சியங்களை ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கூறியிருக்கிறது. வா.சா.ஆ.18, வா.சா.ஆ.19, பி.வா.சா.ஆ.4 புகைப்படங்கள், குறுந்தகடு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B-ன் கீழான சான்றிதழுடன் தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை. அதனால், வா.சா.ஆ.18, வா.சா.ஆ.19, பி.வா.சா.ஆ.4 புகைப்படங்கள், குறுந்தகடுகளை ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வா.சா.ஆ.13 சான்றாவணம் செய்தித்தாள் எடிட்டர் அல்லது நிருபர் மூலம் குறியீடு செய்யப்படாததால் வா.சா.ஆ.13-ன் உள்ளடக்கத்தை ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xiii).** மேலும், சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 54-ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. **54. “Sale” defined.-**

**"Sale” is a transfer of ownership in exchange for a price paid or promised or part-paid and part-promised.**

**Sale how made.-**

**Such transfer, in the case of tangible immoveable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument.**

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:29 +0530

**In the case of tangible immoveable property of a value less than one hundred rupees, such transfer may be made either by a registered instrument or by delivery of the property.**

**Delivery of tangible immoveable property takes place when the seller places the buyer, or such person as he directs, in possession of the property.**

**Contract for sale.-**

**A contract for the sale of immoveable property is a contract that a sale of such property shall take place on terms settled between the parties.**

**It does not, of itself, create any interest in or charge on such property.**

**(xiv).** மேற்படி சட்டப்பிரிவை பரிசீலனை செய்கையில் ரூ.100/- மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையா சொத்தை பொறுத்து உரிமை மாற்றம் ஒரு பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலமாகவே செய்யப்படவேண்டும் என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும், பதிவு சட்டம் 1908 பிரிவு 17-ன் கீழ் ரூ.100/- மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையா சொத்தை பொறுத்த உரிமை மாற்று ஆவணம் கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தெரியவருகிறது. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தாவா சொத்தின் கிரய மதிப்பு ரூ.35,000/- என்றும், மேற்படி ரூ.35,000/- கிரய மறு பயன் தொகைக்கு கங்காதரன், கார்த்தியாயினிக்கு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதனால், மேற்படி வா.சா.ஆ.1 சான்றாவணம் கண்டிப்பாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணம் என்பது தெரியவருகிறது. அதனால், பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்படாத வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் உள்ளடக்கத்தை

ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், மேற்படி வா.சா.ஆ.1 சான்றாவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xv).** மேலும், மேற்படி கார்த்தியாயினி அவரது கணவர் ராஜா தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு வா.சா.ஆ.11 கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருக்கிறார். ஆனால், வா.சா.ஆ.11 சான்றாவணத்தை பரிசீலனை செய்கையில் ராஜா மற்றும் கார்த்தியாயினி விற்பனையாளராகவும், வாதி கிரயம் பெறுபவராகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், சொத்தினை ரூ.10,00,000/-ற்க்கு கிரயம் பேசி அதன் முழு மறுபயன் தொகையை வாதி, ராஜா, கார்த்தியாயினிக்கு செலுத்தி சொத்தின் சுவாதீனத்தையும் ராஜா, கார்த்தியாயினி வாதிக்கு அன்றைய தேதியே ஒப்படைத்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

**(xvi).** மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " **தாவா சொத்தின் சர்வே எண்.820/3 ஆகும். தாவா சொத்தை நான் ராஜன் குடும்பத்தாரிடமிருந்து வாங்கினேன். வா.சா.ஆ.1 சான்றாவணம் மூலமாக தான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 சான்றாவணம் கங்காதரன் என்பவர் கார்த்தியாயினி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் ஆகும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 சான்றாவணம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கார்த்தியாயினி, ராஜன் பெற்றிருந்த பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் தாவா**

**சொத்தை அவர்களிடமிருந்து கிரயம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான்."** என்று சாட்சியம் அளித்திருக்கிறார்.

**(xvii).** அதனால், மேற்படி வா.சா.ஆ.11 சான்றாவணம் பதிவு சட்டம் பிரிவு 17-ன் படி கண்டிப்பாக பதிவு செய்யப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மேற்படி வா.சா.ஆ.11 சான்றாவணத்தின் படி சொத்தினை பதிவு செய்ய வாதி, ராஜா, கார்த்தியாயினிக்கு எதிராக இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவருகிறது. அதனால், வா.சா.ஆ.11 சான்றாவணத்தின் படி தாவா சொத்தினை வாதி அடைந்தார் என்பது நம்பக்கூடியதாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xviii).** மேலும், தாவா சொத்தான கூடலூர் புல எண்.825/3 விஸ்தீரணம் 20 செண்டில் கதவு எண்.439/A, 12/439B வீடுகள், மின் இணைப்பு எண்.03409016424 இருப்பதை பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் சாட்சியத்தில் முற்றிலும் மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " **வா.சா.ஆ.11 விற்பனை ஒப்பந்தத்தில் கதவு எண்.12/439A உள்ள வீடு என்னுடைய பட்டா நிலத்தில் உள்ள வீடு தான். கதவு எண்.12/439A வீடு உள்ள நிலத்தை நான் வாதிக்கு விற்பனை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். "** என்று சாட்சியம் அளித்திருக்கிறார்.

P. MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:40 +0530

**(xix).** மேலும், தாவா சொத்தில் கதவு எண்.439/A, 12/439B வீடுகள், மின் இணைப்பு எண்.03409016424 இருப்பதை நிரூபிக்கக்கூடிய எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிடப்படவில்லை. மேலும், வாதி தாவா சொத்தில் சுவாதீன அனுபோகத்தில் இருக்கிறார் என்பதற்கான வாதி பெயரில் உள்ள வருவாய்துறை அல்லது பதிவுத்துறை ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் வாதி தரப்பில் முன்னிடப்படவில்லை. அதனால், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.21 வரி ரசீதுகள் தாவா சொத்து தொடர்புடையது என்பதனை வாதி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(xx).** மேலும், தாவா சொத்து அரசு நிலம் என்றும், அதில் பாழடைந்த வனக்குடியிருப்பும் உள்ளது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் முக்கிய எதிர்வாதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், பி.வா.சா.ஆ.2, பி.வா.சா.ஆ.3 சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் தாவா சொத்தான புல எண்.825/3 விஸ்தீரணம் 0.07.5 ஹெக்டேர் நிலம் அதிலுள்ள பாழடைந்த வனக்குடியிருப்பு கட்டிடம் இருப்பதாகவும், மேலும், வா.சா.ஆ.6 சான்றாவணத்தில் தாவா சொத்து அரசாங்க நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **" என் மனைவி தான் அரசு புறம்போக்கு நிலத்தை கங்காதரனிடம் இருந்து வாங்கினார் என்று சொன்னால் சரிதான். என் மனைவி**

**வாங்கிய நிலம் புறம்போக்கு நிலம் என்பதால் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்."** என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அதனால், தாவா சொத்து அரசுக்கு சொந்தமான பாழடைந்த வனக்குடியிருப்பு கட்டிடம் இருக்கும் இடம் என்பது தெளிவாக தெரியவருகிறது.

**(xxi).** அதனால், வாதி தாவா சொத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் சட்டப்படியான சுவாதீன அனுபோகத்தில் இருந்தார் என்பதனை வாதி நிரூபிக்கவில்லை என்றும், அதனால் வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இவ்வழக்கு எழுவினாக்கள் 2, 3-ற்க்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>8). எழுவினா 4- ற்கான தீர்வு :</u>**

வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இவ்வழக்கு எழுவினா 3-ற்க்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டிருக்கிறது. அதனால், வாதி இவ்வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதிகளிடமிருந்து பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இவ்வழக்கு எழுவினா 4-ற்க்கு வாதிக்கு பாதகமாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

P. MURUGESAN Digitally signed by P. MURUGESAN Date: 2026.06.09 17:48:47 +0530

**9). எழுவினா 5- ற்கான தீர்வு :**

வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு உரிமையுடையவர் அல்ல என்று இந்நீதிமன்றம் இவ்வழக்கு எழுவினா 3-ற்க்கு வாதிக்கு பாதகமாக தீர்வு கண்டிருக்கிறது. பிரதிவாதிகள் தரப்பில் இவ்வழக்கில் எவ்வித எதிர்பாத்திய கோரிக்கையும் கோரவில்லை. அதனால், தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று இவ்வழக்கு எழுவினா 5-ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**10). முடிவாக, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு பிறப்பிக்கப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 09.06.2026ஆம் தேதி செவ்வாய் கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:51 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**கூடலூர்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**

**வா.சா.1** அகமது குட்டி

**வா.சா.2** ராஜா



P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:54 +0530

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் பெயர்** | **தன்மை** |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.1** | 19.09.1989 | பதிவு செய்யப்படாத கிரய பத்திரம் | அசல் |
| **வா.சா.ஆ.2** | 02.05.1996 | புல வரைபடம் | சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.3** | 10.09.2003 | அறிவிப்பு | ஒளிநகல் |
| **வா.சா.ஆ.4** | 25.07.2012 | வசிப்பிடச் சான்று | அசல் |
| **வா.சா.ஆ.5** | 20.09.2016 | பிறப்பிட சான்றிதழ் | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| **வா.சா.ஆ.6** | - | நிலப்பதிவேடு | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| **வா.சா.ஆ.7** | - | புல வரைபடம் | சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.8** | - | சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 9) | அசல் |
| **வா.சா.ஆ.9** | - | மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 5) | அசல் |
| **வா.சா.ஆ.10** | 07.02.2019 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.11** | 06.10.2018 | பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தம் | நோட்டரி சான்றிட்ட நகல் |
| **வா.சா.ஆ.12** | 17.11.2018 | கடிதம் | அசல் |
| **வா.சா.ஆ.13** | 23.11.2018 | தினமலர் செய்தித்தாள் | அசல் |
| **வா.சா.ஆ.14** | 24.01.2019 | சட்ட அறிவிப்பு & அஞ்சலக ரசீதுகள்-13 | அசல் |



P.
MURUGESAN

Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:48:57 +0530

| | | | |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.15** | - | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை 4) | அசல் |
| **வா.சா.ஆ.16** | - | அஞ்சல் உறைகள் & ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை 2) | அசல் |
| **வா.சா.ஆ.17** | 08.10.2018 | கூடலூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் கடிதம் | அசல் |
| **வா.சா.ஆ.18** | - | புகைப்படங்கள் (எண்ணிக்கை 8) | அசல் |
| **வா.சா.ஆ.19** | - | குறுந்தகடு | அசல் |
| **வா.சா.ஆ.20** | 07.10.2018 | புகைப்படம் எடுத்ததற்கான ரசீது | அசல் |
| **வா.சா.ஆ.21** | - | வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 3) | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

**பி.வா.சா.1** பாலாஜி

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் பெயர்** | **தன்மை** |
|---|---|---|---|
| **பி.வா.சா.ஆ.1** | 18.02.2019 | சட்ட அறிவிப்பு | அசல் |
| **பி.வா.சா.ஆ.2** | 03.09.2019 | கடிதம் | அசல் |
| **பி.வா.சா.ஆ.3** | 03.09.2019 | அடங்கல் பதிவேடு | உண்மை நகல் |
| **பி.வா.சா.ஆ.4** | - | புகைப்படங்கள் & குறுந்தகடு | அசல் |

P. MURUGESAN
Digitally signed by P. MURUGESAN
Date: 2026.06.09 17:49:01 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**கூடலூர்.**

| | |
|---|---|
| வரைவு / உண்மை தீர்ப்புரை | |
| **கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்** | |
| அசல் வழக்கு எண் | 9/2019 |
| தேதி | 09.06.2026 |